(4) அறிக்கை அளித்தல்.

அரசு உறுதி மொழிக்கு பின் இரண்டாவது அறிக்கை.

THIRU MANALI C. KANDASWAMY : Mr. Speaker, Sir, I place on the Table of the House the Second Report (Fifth Assembly) of the Committee on Government Assurances. I take this opportunity, as outgoing Chairman of the Committee, to thank all the Members and the staff who assisted me, through you.

(5) 1972-73-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1972-73-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல நான் முன் வந்துள்ளேன்.

சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 20 கோடி ரூபாய் சர்க்காருடைய வருவாய் அதிகரித்திருக்கிறது. இந்த வருவாய் அதிகரிப்பின் மூலம் இரண்டரைக் கோடி ரூபாய் உபரி தரக்கூடிய ஒரு நிதிநிலை அறிக்கையை இங்கு முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ளார்கள். மொத்தமாக 'ஓவர் ஆல் பட்ஜெட்' என்ற முறையிலே இந்த பட்ஜெட்டைப் பார்த்தால் 55 லட்சம் ரூபாய் இறுதி கையிருப்புப்படி இந்த நிதிநிலை அறிக்கை முடிந்திருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையைப் பூராவாகப் பரிசிலனை செய்து பார்க்கின்றபோது, சென்ற ஆண்டு எந்த அளவுக்கு மக்களின் நலனுக்கும், மேம்பாட்டுக்கும் தொகை ஒதுக்கியிருக்கிறோமோ, அந்த அளவுக்கு இந்த ஆண்டு தொகை ஒதுக்கப்படவில்லை என்பது இந்த அறிக்கையிலிருந்து தெரிகிறது.

20 கோடி ரூபாய் அதிகமாக வருவாய் வந்தும், சென்ற ஆண்டைவிட குறைவாகத்தான் செலவு இருப்பதற்குக் காரணம் என்ன என்பதை நாம் ஆராயக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த அறிக்கையை நாம் பூராவாகப் பார்க்கின்றபோது சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு 28 கோடி ரூபாய் மத்திய சர்க்காருடைய கடனுக்காக சிங்கிங் பண்டில் செலவு எழுதப்பட்டிருக்கிறது. இதுநாள் வரையில் மத்திய சர்க்காருடைய கடனுக்காக சிங்கிங் பண்டில் தொகை ஒதுக்கப்பட்டது